# தமிழகப் போர்முறைகள்

# The Methods of Warfare in Tamilnadu

முனைவர் வே. ரேணுகா / Dr. V. Renuka[1]

**Abstract**

Ancient Tamil Nadu was much wider than it is today. *Movenders, Mudimannars,* small landowners Tamil Nadu has become a war - torn land even before many people think that. Wars in general are abhorrent, unnecessary, even if the usefulness of wars is considered to be destruction, this does not deny the interpretation of wars as a cultural component of a society. When one ethnic group conflicts with another ethnic group and starts war, it becomes more and more united with itself. Its strength and pedigree are assured. Like no other language in the world, the Tamil language is the written evidence of the ancient Tamils martial arts to the world. *Vetchi, Karanthai, Vanchi, Kanchi, Notchi, Ulinai, Thumbai,* and *Vagai*, the octogenarians mentioned in Tolkappiyam, are war-based epics. In the Tamil society, which lived as a cultured and civilized society, the ethics of war were clearly defined and followed. Cows, women, children, old people etc, were not attacked and killed in Tamilnadu warfare. The valor of that time has been with virtue. Therefore, this article examines the unique fighting methods of Tamil Nadu.

Date of submission: 2023-06-27
Date of acceptance: 2023-08-02
Date of Publication: 2023-12-28
Corresponding author's Name: Dr. V. Renuka Email: rathi.renu1982@gmail.com

**Keywords:** Tamil Nadu, Warfare, Traditions, Weapons, Forts, Tombstone, Tolkappiyam, War in literature

### முன்னுரை

பண்டைத் தமிழகத்தில் போர் தோற்றம் பெறுவதற்கான முதற்கரணமாய் ஆநிரை கவர்தல் இருந்துள்ளது. வளப்பற்றாக்குறை காரணமாக ஆநிரைக் கவர்தலும், தற்காப்பு காரணமாக ஆநிரை மீட்டலுமென இருந்து வந்த போர்கள் நாளடைவில் காலப்போக்கு மற்றும் சமுதாய வளர்ச்சிக்கேற்ப மாற்றம் பெறத் தொடங்கின. அரசு உருவாக்கத்தின் பின்னாக போர்கள் என்பவை வீரம் என்னும் கருத்தாக்கத்தின் அடையாளங்களாக கருதப்பட்டன. தன்னுடன் மாறுபாடு கொண்ட அரசனைப் போரில் அடக்குதல் அல்லது அழித்தல் மாபெரும் வீரமாகக் கருதப்பட்டது. வீரத்தின் விளைவு வெற்றியென்றும், புகழென்றும் கொள்ளப்பட்டது. இதனால் மன்னர்கள் ஒருவருக்கொருவர் பொருது மாண்டனர். வெற்றி பெற்றோர் புகழொடு மீண்டனர். அதன்படி, மண்ணாசை, பெண்ணாசை, இனமானம், வீரம், புகழ் மற்றும் பல்வேறு அரசியல் காரணங்களுக்காக தமிழகத்தில் போராட்டங்கள் நடைபெற்றன. இப்போரியல் வாழ்வு குறித்து விளக்குவதாக இவ்வியல் அமைந்துள்ளது.

### போருக்கான காரணங்கள்

மன்னனின் போர் விருப்பக்குணம், நாட்டுப் பாதுகாப்பு, பகை, வஞ்சம் தீர்த்தல்,

[1]The author is a Asistant Professor, Vivekanandha College of Arts and Sciences for Women (Autonomous), Tiruchengode, Tamil Nadu, India. rathi.renu1982@gmail.com

தன் வீரத்தை நிலைநாட்டினால் தனக்கு மணமகள் மறுக்கப்படுதல், இனமானம் காத்தல், குடிகளுக்கு வளமிக்க வாழ்விடம் தேடித்தருதல் என்று போருக்கு வித்தாகப் பல்வேறு காரணங்கள் இருந்த போதிலும் வரலாற்றின் பெரும் போர்கள் 'மண்ணாசை' காரணமாக நிகழ்ந்துள்ளன.

*"எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்*

*அஞ்சுதகத் தலைசென் றடல்குறித் தன்றேஞ்"*

*(தொல், புறம், 64)*

என்கிறது தொல்காப்பியம். 'உலகில் பெரும்பாலும் போர் நடைபெறுவதற்குக் காரணம் ஒருவன் தன் வளர்ச்சியைக் கருதி, மற்றொருவன் தற்காப்பை மேற்கொள்கிறான் என்பதே ஆகும். இவ்விருவரும் ஒருவகையில் மண்ணாசை கொண்டவர்களே' (தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை, நூற்பா. 64) என்பது நச்சினார்க்கினியர் கூற்றாகும். பொதுவாகத் தமிழக மன்னர்கள் போரில் வென்றதன் பின்னாகத் தாம் வென்ற பகுதிகளை, தங்கள் ஆதிக்கத்தின் கீழேயே வைத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. கடல் கடந்து பகைமேற்சென்ற அரசர்களும் வென்ற நாடுகளைத் தமது காலனியாக்கிக் கொள்ளவில்லை. இதற்குத் தொலைவும் போக்குவரத்துச் சிக்கல்களும் காரணமாக இருக்கலாம் என்று கருதலாம். வென்ற நாடுகளைத் தம் ஆளுகைக்குக் கீழ் உட்படுத்துவதற்கு மாறாக அந்நாடுகளுடன் குருதியுறவு எனப்பட்ட மணஉறவினை ஏற்படுத்திக்கொண்டு அவற்றைத் தங்கள் உறவினர் நாடுகளாகவும், நட்பு நாடுகளாகவும் தமிழர்கள் மாற்றிக்கொண்டனர்.

## போர்முறைகளும் மரபுகளும்

தமிழர்களுக்கே உரித்தான போர் முறைகள் மற்றும் மரபுகள் தமிழ் இலக்கண, இலக்கியங்களின் வாயிலாக அறியக் கிடைக்கின்றன. தனித்தன்மை உடைத்தான அப்போர் மரபுகளை (1) போர்தொடங்கும் முன் பின்பற்றப்பட்ட மரபுகள்; (2) போரின் போது பின்பற்றிய மரபுகள்; (3) போரில் வெற்றிக்குப் பின்னால் மேற்கொண்ட மரபுகள் என்று மூவகையாகப் பிரிக்கலாம்.

## போர்தொடங்கும் முன்பானமரபுகள்

### (1) விரிச்சிகேட்டல்

போரைத் தொடங்கும் முன்பாக நற்குறி கேட்கும் வழக்கம் இருந்தது. இதனை 'விரிச்சி கேட்டல்' என்பர். இது 'விரிச்சி நிற்றல்' அல்லது 'வாய்ப்புள்' எனவும் அழைக்கப்பட்டுள்ளது.

*"திருந்திழை மகளிர் விரிச்ச நிற்ப..." (நற்றிணை, பா.40)*

என நற்றிணையிலும்,

*"நெல் நீரெறிந்து விரிச்சி யோர்க்கும்..." (புறநானூறு, பா.280)*

எனப் புறநானூற்றிலும்,

*"பெருமுது பெண்டிர் விரிச்சி நிற்ப..." (முல்லைப்பாட்டு, அடி.11)*

என்ற முல்லைப்பாட்டிலும் நெல்லும், மலரும் விரவி நற்குறி கேட்ட வழக்கம் சுட்டப்பட்டுள்ளது.

### (2) நிமித்தம் பார்த்தல்

போருக்குப் புறப்படும் முன் நிமித்தங்கள் பார்க்கும் மரபு இருந்துள்ளது. 'உன்னம்' எனப்படும் ஒருவகை மரம் தளிர்த்துத் தழைத்திருப்பின், அரசனுக்கு நன்மையாகும் என்றும், அது கரிந்து இருப்பின் தீமை என்றும் கருதப்பட்டுள்ளது. படையெடுத்துச் செல்லும் வேந்தனும், படைவீரர்களும் இந்நிமித்தம் பார்த்துப் போருக்குப் புறப்படுதல் வழக்கமாய் இருந்துள்ளது. இதனை,

*"உடல் வேந்து அடுக்கிய உன்ன நிலையும்.."*

*(தொல், புறத்திணையியல், நூற்பா 63)*

உணரலாம். உன்னமரம் வாடித் தோன்றினும் அதை பொருட்படுத்தாமல் பகைமேற் சென்று வெற்றியுடன் திரும்பும் இயல்புடையவன் பாரிமன்னன்,

*"பொன்னின் அன்ன பூவிற் சிறியிலை*

*புன்கால் உன்னத்துப் பகைவன் எம்கோ..."*

*(பதிற்றுப்பத்து, ஏழாம் பத்து, பா. 61)*

என்று பதிற்றுப்பத்தில் கபிலர்

பாராட்டியிருக்கிறார். பறவைகள் ஒலிப்பதையும், பறப்பதையும் நிமித்தங்கள் உணரப்பட்டுள்ளன. ஒரு நாட்டில், "புதுப்புள் வரினும், பழம்புள் போகினும் தீய நிமித்தம்" (புறநானூறு, பா. 20) என்று புறநானூறு கூறுகிறது. காரியென்னும் பறவை எழுப்பும் ஒலி, ஆந்தையின் அலறல் ஆகியவை தீய நிமித்தங்களாகக் கருதப்பட்டுள்ளன. நிமித்தங்கள் பார்ப்பதைத் தொடர்ந்து பகைவரது ஊருக்கு ஒற்றர்களை அனுப்பி உளவுநோக்கும் வழக்கமும் உள்ளது.

### *(3)* போர்க்களத்தில் இசைக்கருவிகள்

போர்க்களத்தில் வீரர்களுக்கு எழுச்சியூட்டும் பல்வேறு இசைக்கருவிகளை முழக்குவது போர்மரபுகளில் ஒன்றாக இருந்தது. துடி, முரசம், வளை போன்ற இசைக்கருவிகளுடன் பரவலாக ஊதுகொம்பு, சங்கு போன்றவையும் போர்க்களத்தில் முழக்கப்பட்டுள்ளன. போருக்கு எழும் முன், வெற்றி வேண்டி கொற்றவை வழிபாடும், பலியிடலும் நடைபெற்றுள்ளது. போர்முரசைச் சிறப்புடன் நீராட்டி வழிபாடு செய்தது. முரசுக்குப் பலி கொடுத்தாலும், முரசத்தின் கண்ணில் குருதியைப் பூசுவதும், தினைரிசியில் குருதியைக் கலந்து தூவி வழிபடுவதும் வழக்கமாய் இருந்துள்ளது. முரசை வைப்பதற்கென மெல்லிய பூணுடைய கட்டில்கள் இருந்தன. புறநானூற்றுப் புலவரான மோசிக்கீரனார் பெருஞ்சேரல் இரும்பொறையைக் காண வந்தபோது போர்முரசு நீராட்டு விழாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டு முரசுக் கட்டில் வெறுமையாய் இருந்தது. அதை முரசுக் கட்டிலென உணராத அவர் களைப்பு மேலிட அதை படுத்துறங்கியது. அங்கே வந்த அரசன் அவரது முரசுக்கட்டிலை அவமதித்த குற்றத்திற்காக அவரைப் புறக்கணித்துச் சென்ற அரசன் முரசுக்கட்டிலை அவமதித்த குற்றத்திற்காக அவரைப் புறக்கணிக்கிறேன். ஊற்றில் கூறப்பட்டுள்ளது. இதன்வழி போர்முரசத்தின் முக்கியத்துவம் பெறப்படுகிறது (புறநானூறு, பா.20). முற்காலத்தில் 'தண்ணும்மை' என்று அழைக்கப்பட்ட இசைக்கருவிகளை முழக்கி, வீரர்களைப் போருக்கு அழைக்கும் வழக்கம் இருந்தது,

"பொதுவில் தூங்கும் விசியுறு தண்ணுமை
வளி பொருதெண் கண் கேட்பின்ஞ்"

*(புறநானூறு, பா. 89)*

என்று புறநானூறு குறிப்பிடுகிறது. மேலும் தடாரிப்பறை, போர்ப்பறை முதலியன கருவிகளும் முழக்கப்பட்டுள்ளன. இக்கருவிகள் வீரர்களுக்கு எழுச்சியூட்டி வீறுகொள்ளச் செய்வனவாக இருந்துள்ளன.

### *(4)* நெடுமொழி உரைத்தல்

மறவர்கள், தமதரசர் முன்னும் ஏனைய மறவர்களின் முன்னும் தனது பெருமைகளை நெடுமொழியாகக் கூறிக்கொள்வது நெடுமொழி உரைத்தலாகும். மன்னனுக்குத் தன்னுடைய வீரத்தையும், வெற்றியையும், பெருமையையும் வீரன் ஒருவன் தானே எடுத்துரைப்பது நெடுமொழிகூறல் எனப்படும்.

### *(5)* வஞ்சினம் உரைத்தல்

போருக்குச் செல்லும் முன்பாக 'வஞ்சினம் உரைத்தல்' என்னும் மரபு இருந்தது. வஞ் சினம் என்பது 'இன்னது செய்வேன் நான். அவ்வாறு செய்யேனாயின் இன்னன் ஆகு,' என்று கடும் சினத்தோடு கூறும் சொல் ஆகும். வஞ்சினம் உரைப்பது பொருக்கான ஊக்க சக்திகளில் ஒன்றாக இருந்துள்ளது. தாம் உரைத்த வஞ்சினம் பொய்த்துப் போகாத வண்ணம் சோர்வுறாது போரிட வேண்டிய கடப்பாட்டினை வீரர்களுக்கு இம்மரபு வழங்கியுள்ளது. வஞ்சினத்தை 'ஒன்றுமொழி' என்றும் குறித்ததை, "வஞ்சின முடித்த ஒன்று மொழி மறவர்..." (பதிற்றுப்பத்து, ஐந்தாம்பத்து, பா.41) என்பதால் அறியலாம். "இன்றினிது நுகர்ந்தனம் ஐயின் நாளை...", (பதிற்றுப்பத்து, ஆறாம்பத்து, பா.58), "நாளைச் செய்கவென் அமரென..." (புறநானூறு, பா. 304) போன்ற வரிகள் வஞ்சினம் உரைக்கும் மரபிற்கு இலக்கியங்களில் காணக்கிடைக்கும் சான்றுகளாகும். புறநானூற்றில், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன், ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், சோழன் நலங்கிள்ளி, சோழன் கரிகாற் பெருவளத்தான், சேரன் செங்குட்டுவன் ஆகிய மன்னர்கள் போருக்கு முன்பாக வஞ் சினம் உரைத்த செய்திகள் கூறப்பட்டுள்ளன.

மகாபாரதத்தில் அர்ஜுனனும், பீமனும், திரௌபதியும் வஞ்சினமுரைத்த செய்திகளை மகாகவி பாரதியார் பாஞ்சாலி சபதமெனும் தனிநூலாக வடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

***(6) பாசறை நிலை***

பகைநாட்டு ஊரெல்லையில் அரசனும், வீரர்களும் தங்குவதற்காக பசிய மூங்கில்களால் அறைகள் அமைப்பது பாசறை எனப்பட்டது. இலை தழைகளை மேற்கூரையாக இட்டு, வெளித் தெரியாதபடி, ஒருங்கிணைத்துக் கட்டப்பட்ட, ஒரு சிறிய ஊரைப் போன்று இருத்தலால் பாசறையைக் ‘கட்டூர்’ என்றும் அழைத்துள்ளனர்.

*“வெண்பூ வேளையொடு சுரைதலை மயங்கிய*

*விரவு மொழிக் கட்டூர் வயவவேந்தே…”*

*(பதிற்றுப்பத்து, ஒன்பதாம் பத்து, பா. 90)*

அதில் வெள்ளைப் பூக்களைக் கொண்ட வேளைக்கொடியும், சுரைக்கொடிகளும் படரவிடப்பட்டக் கட்டூர் என்பது புலனாகின்றது.

**போரில் பின்பற்றப்படும் மரபுகள்**

போரில் போருக்கேற்ற அடையாளப் பூவைச் சூடுதல் போர்மரபுகளுள் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஆநிரை கவரச் செல்வோர் வெட்சிப் பூவையும், ஆநிரையை மீட்கச் செல்வோர் கரந்தைப் பூவையும், பகைவர் நாட்டின் மீது படை தொடுப்போர் வஞ்சிப் பூவையும், மதில் காப்போர் நொச்சிப் பூவையும், கோட்டையை முற்றுகை இடுவோர் உழிஞைப் பூவையும், போர்க்களத்தில் எதிரெதிர் நின்று போரிடுவோர் இரு திறத்தாரும், போரில் வெற்றி பெறுவது வழக்கம். சேர, சோழ, பாண்டியருக்கு முறையே பனை, ஆத்தி, வேம்பு ஆகிய பூ மாலைகள் உரியனவாக உள்ளன. இதனை, “இரும் பனம் போந்தை…” (பொருநராற்றுப்படை, அடி 143) என்னும் பொருநராற்றுப்படை வரிகளால் அறியலாம்.

***(1) போர் எச்சரிக்கை***

போர் தொடங்குவதற்கு முன்னராக கொல்லக்கூடாத உயிர்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விடுமாறு முரசறைந்து அறிவிக்கப்பட்டுள்ளது. இது போரின் ‘அறத்தாறு’ எனப்பட்டது.

***(2) முற்றுகையிடுதல்***

‘கோட்டை முற்றுகை’ என்னும் போர்முறை அக்கால போர்முறைகளில் ஒன்றாக இருந்துள்ளது. பகையரசர் கோட்டைக்குள் இருப்பவர்களுக்கு, வெளியிலிருந்து எந்த உணவுப்பொருளும் செல்லவிடாமல் அவர்களைப் பசியால் வாடச்செய்து பணியச்செய்தல் வழக்காகும்.

***(3) உயிர் நீத்தல்***

போரில் படுகாயமடைந்த வீரன், உயிர்வாழ விரும்பாது தன்னைத் தானே வாளால் கிழித்துக் கொண்டு உயிர்நீப்பதும் வழக்கமாயிருந்திருக்கிறது. போரில் அரசன் இறந்ததைக் கண்டு, தாமும் உயிர்நீத்த வீரர்களும் இருந்துள்ளனர். சிலமறவர்கள் செஞ்சோற்றுக் கடன் தீர்ப்பதற்காக தமதுயிரை பலியாகத் தரமுன் வருதலும் மரபாய் இருந்துள்ளது. இவர்களைச் “சோறுவாய்த் தொழிந்தோர்” (முல்லைப்பாட்டு, அடி 72) என முல்லைப்பாட்டு குறிப்பிடுகிறது.

***(4) எரிபரந்தெடுத்தல்***

வஞ்சிமாலை அணிந்த வீரர்கள் பகைவரது நாட்டு எல்லையுள் புகுந்து கண்ணில் பட்ட ஊர்களை நெருப்பிட்டுக் கொளுத்துவது ‘எரிபரந்தெடுத்தல்’ எனப்பட்டது. கரும்பும், நெல்லும் செழித்த வயல்களைத் தீயிட்டு அழிப்பது, நீர்நிலைகளைக் களிறுகளைக் கொண்டு உடைத்து அழிப்பது வழக்கம். உழிஞை மறவர் பகைவரது கோட்டைகளை இடித்துத் தரைமட்டமாக்கி பகைவரின் குருதி ஈரத்தில் கழுதையை ஏரில் பூட்டி உழுவர் என இலக்கியங்கள் காட்டுகின்றன.

***(5) அறத்தின் மண்டலம்***

படையோடு படை மோதி அழிந்த பின்னாக இரண்டு பகையரசர்களும் தனித்து மோதிக்கொள்ளும் போருக்கு ‘அறத்தின் மண்டலம்’என்று பெயராகும்.

**போருக்குப் பின்னான மரபுகள்**

போரில் வெற்றிக்குக் காரணமாயிருந்த மறவர்க்கு அரசன் கல்லும், ஊன்சோறும் தருவது போருக்குப் பின்னான வழக்கமாக

இருந்து வருகிறது. "ஊன் துவை அடிசில்..." (பதிற்றுப்பத்து, ஐந்தாம்பத்து, பா. 45) என்றவழி, ஊனும், அரிசியும் இணைத்து சமைத்த உணவினை உண்ட வழக்கத்தை அறியமுடிகின்றது. இந்நிகழ்வைத் தொல்காப்பியர் 'உண்டாட்டு' என்னும் சொல்லால் குறிக்கின்றார். வெட்சித் திணையில் போர்முடிவுற்ற காலத்தில் ஆநிரைகளைக் கவர்ந்து வந்தோர் பங்கிட்டுக் கொண்டு ஊன் சோறும், கல்லும் உண்டு நிகழ்த்திய தகவல்கள் இடம்பெற்றுள்ளன. கல்லுண்டு மகிழ்வோரின் ஆடலுக்கேற்ப முழவு முழங்கப்பட்டுள்ளது. இதனைத் 'தூங்கு கொலை முழவு' என்றழைத்துள்ளனர்.

வெற்றி பெற்ற அரசன் பகையரசனின் காவல் மரத்தை வெட்டி வீழ்த்தி அதனைக் கொண்டு தனக்கென போர்முரசு செய்வித்துள்ளான். பகை நாட்டிலிருந்து பொன்னும், பொருளும் கொண்டு வரப்பட்டு கருவூலத்தை நிறைத்துள்ளனர். பகையரசனின் முடிப்பொன்னால் தன் காலுக்கு வீரக்கழலும், ஆரமும் செய்து கொள்வது வெற்றி பெற்ற வேந்தனின் வழக்கமாயிருந்தது. போர் முடிந்த பின்பாக போர்க்களத்திலேயே களவேள்வி நடத்தப்பட்டுள்ளது. வேந்தனின் சினம் தணிக்கும் பொருட்டு கூத்தரும், பொருநரும், விறலியரும் சாந்திக்கூத்து நிகழ்த்தியுள்ளனர். வேந்தன் நாளவையில் அமர்ந்து தனக்கு வெற்றியைத் தேடித் தந்த மறவருக்கும், தன்னைப் புகழ்ந்து பாடிய புலவருக்கும், பாடினிக்கும், விறலிக்கும் இன்ன பிறருக்கும் பொன்னும், பொருளும் வரையின்றி வாரிக் கொடுத்து மகிழ்வித்துள்ளான். மன்னனின் போர்ச்சிறப்புகள் வரலாற்றில் நிலைத்திருக்கும் பொருட்டாக கல்வெட்டுகளாகவும், மெய்கீர்த்திகளாகவும், செப்பேடுகளாகவும், இலக்கியங்களாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. போர்விருப்பச் சமூகத்தின் பின்னணியில், போர்க்களத்தில் புண்பட்டு வீரமரணம் அடைவதே பெருமையென எண்ணிய மனப்பாங்கு வேறூன்றி இருந்துள்ளது. அதனால் குழந்தை இறந்து பிறந்தாலும் வாளால் கீறிய பின் புதைத்தலே வழக்கமாக இருந்து வருகிறது. இதனை, "குழவி இறப்பினும் ஊந்தடிபிறப்பினும்..." (புறநானூறு, பா. 74) என்னும் வரிகளால் அறியலாம். மேலும், பொரிடாதோரை இழிவாகக் கருதியதையும், அவர்களையும் மார்பில் கீறிப் புதைத்ததையும், "வாள் போழ்ந்து அடக்கலும் உய்ந்தனர்..." (புறநானூறு, பா. 93) என்ற புறப்பாடல் எடுத்துரைக்கின்றது.

### (1)படைச்சிறப்பு

அரசமைப்பின் இன்றியமையாத அங்கங்களுள் ஒன்று படையாகும்.

*"படைகுடி கூழ்அமைச்சுநட்பரண் ஆறும்*

*உடையான் அரசருள் ஏறு..."*

(திருக்குறள், இறைமாட்சி, குறள் *381*)

என்னும் குறளில், வள்ளுவர் அரசனுக்குரிய வலிமைகளுள் படையினை முதன்மையாகக் கூறியுள்ளதால் படைச்சிறப்பின் பெருமையை அறியலாம். மேலும் படைசிறப்பைக் கூறும் பொருட்டாகத் திருக்குறளில் படைமாட்சி, படைச்செருக்கு என இரண்டு அதிகாரங்களை அமைத்துள்ளதன் வாயிலாகவும் படைபலத்தின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்தியுள்ளார் வள்ளுவர். பண்டைத் தமிழகத்தில் அரசஉருவாக்கம் நிகழ்ந்த காலகட்டங்களில் மன்னர்களிடம் நிலையான இராணுவம் ஒன்று இருந்ததாகத் தெரியவில்லை. எனினும் போர் என வரும்போது குடிகளுள் அனைத்து தரப்பினரும் போரில் பங்கேற்கச் செல்லும் வழக்கம் இருந்தது. போர்க்காலத்தில் தூதுவரைத் தன் நாட்டிற்குள் அனுப்பி அரசன் போருக்கான வீரர்களை திரட்டியதை, "வருகதில் வல்லே வருகதில்ஞ்" (புறநானூறு, பா. 284) என்ற புறநானூற்றுப் பாடல் குறிப்பிட்டிருக்கிறது. இதன் வழி நூலரிமாலை சூடி வீரன் தனியொருவனாக வருவது புலப்படுவதால், முன்கூட்டியே தயாராக போர் வரக் காத்திருக்கும் படைகள் எதையும் தொடக்ககாலத்தில் அரசர்கள் வைத்திருக்கவில்லை என அறியலாம். ஆனால் பிற்காலத்தில் காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, களிறுப்படை என்ற நான்கு வகையான படைகளை வேந்தர்கள் போரில் பயன்படுத்தியுள்ளனர். "படையானது மூலப்படை, கூளிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை

என ஆறு பிரிவுகளையுடையது" (திருக்குறள், பரிமேலழகர் உரை, பக். 288) என்று பரிமேலழகர் கூறியுள்ளார். படை உடைய அரசன் அப்படைகளைப் பெருக்கி மக்களைக் காக்கும் கடப்பாடு கொண்டவனாக விளங்கியிருக்கிறான். மன்னர்கள் நாற்படைகளைக் கொண்டிருந்ததை, "நெடுநல் யானையும் தேரும் மாவும்..." (புறநானூறு, பா. 72) என்னும் அடி சுட்டிக்காட்டுகிறது.

மேலும், படை வீரர்களை அவர்கள் மேற்கொண்ட பணிக்கேற்ப கூளிப்படையினர், கிடுகுப்படையினர், தூசிப்படையினர் என்றும் அழைத்துள்ளனர். "கொள்ளை வல்சிக் கவர்காற்..." (பதிற்றுப்பத்து, இரண்டாம் பத்து, பா. 19) என்று பதிற்றுப்பத்து கூறுவதால் கூளிப்படையினர் போருக்குச் செல்லும் வழிகளில் கற்களை வெட்டி வழி திருத்தியமைப்பவர் என்பது புலனாகிறது. இவர்கள் பகைப்புலத்தில் தமக்கும், தம்மினத்தார்க்கும் வேண்டியவைகளை அளவில் கவர்ந்து கொண்டு எஞ்சியதை எதிரிகளுக்கு உதவாத வகையில் சூறையாடி அழிப்பதை வழக்கமாகக் கொண்டவர்களாவர். தூசிப்படை என்பது கூளியர் படையை அடுத்து பின்னால் செல்லும் படையாகும். வழியைத் திருத்தி நெறி சமைக்கும் பணியில் கூளிப்படையுடன் தூசிப்படையினரும் இணைந்து உடன் சென்றுள்ளனர். காலாட் படையினைத் தொடர்ந்து யானைப் படை முதன்மைப் படையாக இடம்பெற்றுள்ளது. சங்கப்பாடல்கள் பலவற்றில் யானைப்படை பற்றியும் அதன் வலிமை பற்றியும் தகவல்கள் கிடைக்கின்றன. நன்கு போர்ப்பயிற்சி வழங்கப்பட்ட யானைகள் போரில் கொலைத் தொழில் புரிவனவாக உள்ளன. பதிற்றுப்பத்தில் ஒரு பாட்டின் தலைப்பு 'தொழில் நவில் யானை'என்ற சிறப்புத் தொடரால் அமைக்கப்பட்டிருப்பது யானைப்படையின் மேன்மையை விளக்குவதாக உள்ளது.

"வண்டுபடு சென்னிய பிடி புணர்ந்தியல..." (பதிற்றுப்பத்து, ஒன்பதாம் பத்து, பா. 82) என்னும் வரிகள் போர்த்தொழில் புரியும் சினம் கொண்டயானைகளின் சித்திரத்தை மனத்தகத்தில் வழங்குவனவாக உள்ளன. சிறப்புமிக்க பெரும் யானைப்படையைக் கொண்டிருந்ததாலேயே சேரமன்னன், 'பல்யானைச் செல்கெழு குட்டுவன்' என்றழைக்கப்பட்டுள்ளான் எனக் கருதலாம். யானைகளுக்குக் கள் ஊட்டி போருக்கு அழைத்துச் சென்றதோடு, வலிமை மிக்க கோட்டை வாயில்களைத் தாக்கி உடைக்கும் பணிகளிலும் யானைப் படையை உபயோகித்துள்ளனர். யானைப் படையைத் தொடர்ந்து,குதிரைப் படை பின் சென்றுள்ளது. சங்ககாலத்தில் போக்குவரத்திற்கும், போர்த் தொழிலுக்கும் புரவிகள் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன. சங்க இலக்கியங்களில் குதிரையானது மா, இவ்வுளி, புரவி, பரி, கலிமா, கடுமா, உலைமா, கொய்யுளைமா, பாய்மா ஆகிய பெயர்களால் குறிக்கப்பட்டுள்ளது.

"ஆய் மயிர்க் கவரிப் பாய்மாமேல் கொண்டு..."

(பதிற்.பத்து, ஒன்பதாம் பத்து, பா. 90)

"கொய் உளைமான் தேர்க் கொடித் தேரான் கூடற்கும்..." (பரிபாடல், பா. 17)

என்ற வழி, குதிரைப்படை விரைந்து தாக்குவதற்கு உரியதாகையால், முன்னணிப் போரில் பயன்படுத்தப் பட்டதோடு, தேர்களை இழுத்துச் செல்லவும் பயன்படுத்தப் பட்டுள்ளது. போர்களில் தேர்ப்படையைப் பயன்படுத்தும் வழக்கமும் உள்ளது. உருவப் பல்தேர் இளஞ்சேட்சென்னி என்ற சோழமன்னன் பல அழகிய தேர்களைக் கொண்டிருந்தவன் என்பதற்கு அவனது பெயரே சான்றாய் நிற்கிறது. தேர்கள் பொன்னால் செய்யப்பட்டிருந்ததையும், அதில் மணிகளும் ஒளி வீசும் கொடியும் கட்டப்பட்டிருந்ததையும் இலக்கியங்கள் காட்டுகின்றன. காலாட்படையில் பல இன வீரர்கள் இருந்துள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் யவனவீரர்கள் அவர்கள். இவர்கள் படைகளாகவும், மெய்க்காப்பாளர்களாகவும் பணியாற்றினர். இவையன்றி, கடல்வணிகத்திற்குப் பாதுகாப்பளிக்கவும், கடற்கொள்ளையர்களை அழிக்கவும் கப்பற்படை பயன்படுத்தப்பட்டுள்ளது.

தனது வலிமைமிகு கடற்படையின் துணையாலேயே கரிகாலன் இலங்கை மீது போர் தொடுத்துள்ளான். அவனது முன்னோர் கடற்போர் நிகழ்த்தியிருந்தமையை,

*“நளியிரு முன்நீர் நாவாயோட்டி...” (புறநானூறு, பா. 66)* என்று புலவர் வெண்ணிக்குயத்தியார் குறிப்பிட்டுள்ளார். கடற்கொள்ளையில் ஈடுபட்ட கடம்பர்களைத் தனது கடற்படை மூலம் ஒழித்ததாலேயே சேரமன்னன் செங்குட்டுவனுக்குக் ‘கடல் பிறக்கோட்டிய’என்னும் சிறப்புப்பெயர் அடைமொழியாக வந்துள்ளது எனலாம்.

***(2) போர்க்கருவிகளின் பயன்பாட்டு முறை***

பண்டைய போர்களில் பல்வேறு வகையான படைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டன. இக்கருவிகளை எய்யும் கருவிகள், எரியும் கருவிகள், குத்தும் கருவிகள், வெட்டும் கருவிகள், அடிக்கும் கருவிகள், தடுக்கும் கருவிகள் என அறுவகையாகக் கொள்ளலாம். வில்லும், அம்பும் எய்யும் கருவிகளாகும். விட்டேறு போன்றவை எறியும் கருவிகளாகும். வேல், ஈட்டி, குந்தம் போன்றவை குத்தும் கருவிகளாகும். வால் போன்றவை வெட்டும் கருவிகளாகும். மழு, தண்டு போன்றவை அடிக்கும் கருவிகளாகும். கவசம், கேடகம் போன்றவை தடுக்கும் கருவிகளாகும். இவற்றில், தமிழர் பெரும்பான்மையும் பயன்படுத்திய

போர்க்கருவிகளை இரண்டு வகைகளாகபகுத்துக் கொள்ள இயலும். அவை,

1. வில், வேல், வாள் ஆகியபோர்கருவிகள்

2. மதிலரண் காக்கும் எயிற் போர்க் கருவிகள்

என்பனவாகும். தும்பை முதலான போர்களில் வில், வேல், வாள் போன்ற கருவிகள் முதன்மைப் போர்க்கருவிகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொல்காப்பிய புறத்திணையலில், ‘வாளோர் ஆடும் அமலை’, ‘ஒள்வாள் வீசிய நூழில்’, ‘வாள்மங்கலம்’ எனப் பல இடங்களில் வாள் என்னும் போர்க்கருவி குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. வேல், முருகக்கடவுளின் ஆயதமாகக் கருதப்படுவது. போர்களில் வேல் பயன்படுத்தப்பட்டமைக்கு ஏராளமான ஆதாரங்கள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. “கணையும் வேலும் துணையுற மொய்தலிற் ...” *(தொல். புறத்திணையியல், நூற்பா 71)* எனத் தொல்காப்பியத்தில் வேல் பயன்படுத்தப்பட்டமை குறித்து கூறப்பட்டுள்ளது. இவ்விரு போர்க்கருவிகளும் பகைவரைத் தொலைவிலிருந்து தாக்குவதற்கு உதவியாய் இருந்துள்ளன. வில்லானது கணை, அம்பு, பகழி என பல்வேறு சொற்களால் குறிக்கப்பட்டுள்ளது. வில், வேல், வாள் ஆகிய இம்மூன்று கருவிகளும் இரும்பால் செய்யப்பட்டதால் ‘எஃகம்’ என்று அழைக்கப்படுகின்றன.

*“எடுத்து எறி எஃகம் பாய்தலின்...” (முல்லைப்பாட்டு, அடி 68 69)*

என்னும் முல்லைப்பாட்டும்,

*“புண்படு குருதி அம்பு ஒடுக்கவும்...” (புறநானூறு, பா. 98)*

என்னும் புறநானூற்றுப் பாடலும் வேல், வாள், அம்பு என்னும் மூன்று முதன்மைப் படைக்கலங்களைக் குறித்துள்ளதைக் காணலாம். இம்முதன்மைக் கருவிகள் தவிர வேறு சில போர்க் கருவிகளும் போர்முனையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. “அடார், அரம், அரிவாள், ஆயுதக்காம்பு, எஃகு, கண்ணாடி தைத்த கேடயம், கணிச்சிப்படை, கலப்பை, கழிப்பிணிப் பலகை, காழெஃகம், கிளிக்கடிகருவி, குந்தாலி, குறடு, கேடகம், கோடாலி, சக்கரம், சிறியிலை எஃகம், சோறுகுத்தி, தறிகை, துடுப்பு, படை கட்டிய தண்டு, மழு, வாள், வில், வேலுறை’ *(புறநானூறு, முன்னுரை, உ.வே. சாமிநாதையர்)* ஆகிய கருவிகளையும் தமிழர்கள் பயன்படுத்தினார்கள் என்று புறநானூற்றின் முன்னுரையில் உ. வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார்.

***(3) எயிற்போர்க் கருவிகள்***

கோட்டை மதிலரண்களில் அமைக்கப்பட்டு இருந்த தற்காப்புப் போர்க்கருவிகள் எயிற்போர்க் கருவிகள் எனப்பட்டன. இக்கருவிகள் மன்னர்களின்

கோட்டைகளைப் பாதுகாத்தல் என்னும் நோக்கத்திற்காக மதில்களில் அமைக்கப்பட்டிருந்தன. தானே எய்யும் வில், கருவிரல் குரங்கு போன்ற பொறி, தொடர்ச்சியாய் கற்களை உமிழும் கவண், கொதிக்கும் நெய்யை வாரி இறைக்கும் எந்திரம், உருக்கிய செம்பை காறி உமிழும் பொறி, உருக்கிய இரும்பை உமிழும் பொறி, கல்லுமிழ் கவணுக்கு வேண்டிய கற்களைச் சேமித்து வழங்கும் கூடை, மதில் பற்றிய கழுத்துப் பிணைக்கும் பொறி , ஆண்டலைப் புட்பொறி, கிடங்கில் ஏறுவோரை மறித்துக் கீழே தள்ளும் இரும்புக்கவை, கழுக்கோல், அம்புக்கட்டுகள், அம்பு ஏவறைகள், மதிலைப் பற்றியவர் கைகளைக் குத்தித் துளையிடும் ஊசி, பறவை போலச் சீறி பகைவர் கண்களைக் கொத்தி மீளும் பொறி, மதில் மீது ஏறுவாரைக் கொம்பால் குத்திக் கிழிக்கும் கதவுகள் , ஏவுகணைகள், கோல், குந்தம், வேல் ஆகிய பல வகைப் பொறிகள் மதிலரண்களில் பொருத்தப்பட்டிருந்ததை, "கருவிரல் ஊகமும் கல்உமிழ் கவணும்..."(சிலப்பதிகாரம், அடி 207 216) என்னும் சிலப்பதிகார வரிகளால் அறியலாம். இவையன்றி, வேறு சில போர்க் கருவிகளையும் தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

இதனை, தோமரம்சக்கரம் சூலம்கோல்." (கம்பராமாயணம், கும்பகர்ணவதைப் படலம், பா. 105) என்ற போர்ப்படை வரிசை காட்டும் கம்பராமாயணப் பாடல்வழி அறியலாம். இராவணன் 'மூலபலம்' என்ற பெயரில் படைக்கலத்தொகுப்பு ஒன்றை வைத்திருந்தமை குறித்து, "சூலம்வாங்கிடின் சுடர்மழு ஏந்திடின்..." (கம்பராமாயணம், மூலவதைப்படலம், பா. 11) என்னும் கம்பராமாயணப் பாடலில் காட்டப்பட்டுள்ளது. போரில் வெற்றி பெற்ற பின்பாக, வென்ற வீரர்கள் பகைநாட்டில் 'படை வீடு' அமைத்துத் தங்கும் வழக்கம் இருந்தது. அந்தப் படைவீடு சிதைந்த போர்க்கருவிகள் கொண்டு கட்டப்பட்டதை, "வாங்குவில் அரணம் அரணமாக..." (முல்லைப்பாட்டு, அடி 37 42) என்ற முல்லைப்பாட்டின் பாடலடிகளால் உணரலாம். பயன்படாநிலை எய்திய உடைந்த, சிதைந்த, போர்க்கருவிகள் படைவீட்டின் சுவர்களாக மாற்றப்பட்டுள்ளன. உடைந்த போர்க்கருவிகளின் பகுதிகள் தூணாக மாற்றப்பட்டு, கயிற்றால் அவை இறுக பிணைக்கப் பெற்று குந்தம், கிடுகு முதலானவை தடுப்புச்சுவர்களாகவும், துணிகள் கூரைகளாகவும் அமைக்கப்பட்டுள்ளன.

### பொரியலில் இயற்கை அரண்களின் பங்கு

#### *(1) மலையரண்*

பண்டைக் காலத்தில் நாட்டின் பாதுகாப்பிற்கு மலைப்பகுதி அரணாகத் துணைநின்றது. தூரத்தில் வரும் பகைவர் படைகளைக் கண்காணித்து உளவு பார்த்தற்கும், மேலிருந்து பெருங்கற்களைக் கீழே உருட்டி எளிதாகப் பகைவர்களை அழிப்பதற்கும், அம்பெய்து கொள்ளுவதற்கும் மறவர்களுக்கு மலையரண்கள் பேருதவி புரிந்தன. சங்ககாலக் குறுநில மன்னர்கள் பெரும்பாலும் மலைக்கிழவராகவே இருந்தனர். மறவர்களுக்கு தேவையான அவசரகாலங்களில் போதிய உணவு, நீரும் உடைய பாதுகாப்பு அரணாக மலையரண்கள் திகழ்ந்தன.

#### *(2) நிலவரண்*

நாட்டின் பாதுகாப்பிற்காக மறவர் பெருமக்களால் சிற்சில செயற்கை அரண்களும் உருவாக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று நிலவரண் ஆகும். "காடும் உடைய தரண்" (திருக்குறள், அரண், குறள் 742) எனும் குறட்பாவில் உள்ள 'மண்' என்னும் சொல்லானது நிலவரணைக் குறிக்கும். தலைநகருள் நுழைந்த பகைவர்கள் அகழியைக் கடந்தவுடன் கண்ட பரந்த நிலப்பரப்பு 'நிலவரண்' என்றழைக்கப்பட்டது. பரிமேலழகர் இவ்விடத்தை 'வெள்ளிடைநிலம்' என்றழைத்துள்ளார். அகழி கடந்து வந்த பகைவரைக் குறி வைத்துத் தாக்குதற்கும், பகைவர் முற்றுகை நீடித்திருக்கும் போது, அகத்தார்க்குத் தேவையான உணவுகளை விளைவிப்பதற்கும் இந்நிலம் மறவர்களால் பேணப்பட்டு வந்தது.

#### *(3) நீரரண்*

தலைநகருக்கு இயற்கை நீர்நிலைகள் அமைந்து, மறவர்களால் பாதுகாக்கப்படுதல் உண்டு. சிலநேரங்களில் செயற்கை

நீர்நிலைகள் தோற்றுவிக்கப்படுதலும் உண்டு.

*(4)* **காட்டரண்**

தலைநகருக்குள் பகைவர்கள் எளிதில் புக இயலாதவாறு அடர்த்தியான மரங்கள் இயற்கையாகவும், செயற்கையாகவும் மறவர்களால் வளர்க்கப்பட்ட காட்டுப்பகுதியானது 'காட்டரண்' என்றழைக்கப்பட்டது. இப்பகுதியானது படைமறவர்கள் மறைந்திருந்து தாக்குதல் மேற்கொண்டது துணைபுரிந்தது.

*(5)* **மதிலரண்கள்**

வேந்தன் வீற்றிருந்த தலைநகரானது மலையரண், காட்டரண், நீரரண், நிலவரண், மதிலரண் என்னும் ஐவகை அரண்களால் சூழப்பட்டிருந்தாலும் இலக்கியங்களில் பெரும்பான்மையான இடங்களில் சிறப்பிற்குரியதாய் போற்றப்பட்டுள்ளது. உயரம், அகலம், திண்மை, அருமை என்னும் நான்கு பண்புகளும் நிறைந்ததாய் மதிலரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதனை, "அமைவரண் என்றுரைக்கும் நூல் (திருக்குறள், அரண், குறள். 743) எனத் திருக்குறள் எடுத்துரைக்கின்றது. மறவர்கள் மதில்களின் மேல் நின்று மறைந்து அம்பு எய்தற்குரிய புழைகளுடன் மதில்கள் அமைக்கப்பட்டன. இத்தகைய மதில்களை 'எயில் மதில்கள்' என்றழைத்தனர்.

### படைப் பிரிவுகள்

போருக்குப் புறப்படும் படைகளில் முதலில் காலாட்படையும், இரண்டாவது குதிரைப்படையையும், மூன்றாவது தேர்ப்படையையும், நான்காவது யானைப்படையையும் செல்லுதல் மரபாகும். இந்நாற்படைகளும் தத்தமது இனத்துடன் பொருந்திப் போரிடும். படைமறவர், பகைநாட்டுப் படை மறவருடனும், படைத்தலைவன், பகைநாட்டுப் படைத் தலைவனுடனும், வேந்தன், பகைநாட்டு வேந்தனுடனும் பொருந்திப் போரிடுவர். படைமறவர் முதலிலும், படைத்தலைவர் அடுத்தும், வேந்தர்கள் இறுதியும் பொருதுவர். இம்முறையிலிருந்து மாறி எதிரிப் படையரசன் அல்லது எதிரிப் படைத்தலைவனைப் போரிட்டுக் கொன்று, எதிரியின் தலையைக் கொண்டு வந்து தம் வேந்தனிடம் காட்டி பெருங்கொடையைப் பெறுதலும் மறவர் வழக்காகும். இந்நிகழ்வைத் 'தலைமாராயம்' என்றழைத்தனர். போர்க்களம் செல்லும் வேந்தனுடன் படைமறவர் மட்டுமின்றி புலவர், பாணர், கூத்தர் முதலியோரும் செல்லுதல் வழக்கம். போர்க்கள நிகழ்வுகளைப் பதிவுசெய்து பாட்டாகப் பாடவும், தமது பாடல்களின் வாயிலாக வீரர்களை வீறு கொண்டு எழச்செய்யவும் இத்தகையோர் பயன்பட்டனர்.

### பாசறை

பலநாடுகள் நடைபெற்ற போர்தனில் பகல்தொறும் பொருந்திப் போரிட்ட வேந்தனும், மறவரும் இரவுநேரத்தில் பாசறையில் தங்குவர். வேனிற் காலத்தில் அமைக்கப்பட்ட பாசறை வேனிற்பாசறை என்றும், குளிர்காலத்தில் அமைக்கப்பட்ட பாசறை கூடிர்பாசறை என்றும் பெயர் பெற்றது.

### காலமும், சூழலும்

பொதுவாக, போர்கள் நீண்டகாலம் நிகழ்த்தப் பெறுவதில்லை. கார்காலம் தொடங்கும் முன் அல்லது தொடங்கியவுடன் முடிக்கப்படுதலே மரபாகும். போர் தொடங்கும் முன், போர்க்களத்தையடுத்த ஊர்களில் உள்ள ஆநிரைகள், பார்ப்பனர், பெண்டிர், மகட்பெறாதோர், நோய்வாய்பட்டோர், முதியோர், குழந்தைகள் போன்றோர் பாதுகாப்பான இடத்திற்குச் சென்று சேரும்படி எச்சரிக்கப்படுவர். பகைநாட்டின் பறந்தலை அமைப்பு, பகைவர்களின் எண்ணிக்கை, பலம் ஆகியவற்றைக் கணித்து, சதுரம், நீள்சதுரம், வில், வளையம், வட்டம், அரைவட்டம், சக்கரம், சிறை, விரிபறவை போன்ற பல்வேறு வடிவங்களில் சேனைகளின் வியூகத்தை அமைத்துப் போரிடுதல் மரபாகும்.

### கோன்மையின் சிறப்பு

ஒரு நாடானது பிறநாட்டைச் சாராது, தனக்குரிய சட்டங்களைத் தானே அமைத்துக் கொள்ளும் உரிமையைப் பெற்றுத்

திகழும் பொழுது அந்நாட்டு மன்னனின் செங்கோலானது கோன்மையுடன் நிலைபெற்றிருந்தது எனக் கொள்ளலாம். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இவ்வுரிமையைப் பெற்று மூவேந்தர்களும் முழுமையான ஆட்சியை நடத்தினர். "அடங்காவிளையுள் நாடுகிழவோயேஞ்" (புறநானூறு, பா. 200) எனும் கபிலர் கூற்றால் சிற்றரசர்களுக்கடங்கிய கீழ் சிற்றரசர்களுமுண்டு என்பதைத் தெளியலாம். பண்ணன், திதியன், நள்ளி, பிட்டங்கொன்றன், எருமையூரன், வேங்கைமான் போன்ற பல்வேறு கீழ்ச் சிற்றரசர்கள் தமிழகம் முழுவதும் வீற்றிருந்தனர்.

## முரசின் சிறப்பு

வேந்தனது அறிவிப்பை அறிவித்ததற்காக அடிக்கப்பட்ட பேரிகை என்னும் பெரும்பறைசென வழங்கப்பட்டது. ஏதேனுமொன்றை அறிவித்தல், யாரேனும் ஒருசாரரை அழைத்தல், படை திரட்டுதல், போர்க்களப் பொருநரை ஊக்குவித்தல், வெற்றியை அறிவித்தல் போன்ற பல்வேறு காரணங்களுக்காக முரசம் அடிக்கப்பட்டது. கொடை, தியாகம் போன்ற உணர்வுகளுக்கான முரசு, முறை, நியாயம் போன்ற காரணங்களுக்கான முரசு என முரசுகள் அடிக்கப்பட்டாலும் வீரம், போர் போன்ற காரணங்களுக்காக அடிக்கப்பட்ட முரசு மிகச் சிறந்ததாகக் கருதப்பட்டது. இப்போர் முரசனானது புலியைக் கொன்று தோலால் உருவாக்கப்பட்டதை, "மாக்கண் முரசம் ஓவுஇல கறங்கஞ்" (மதுரைக்காஞ்சி, அடி 732 733) என மதுரைக்காஞ்சியும், "முரசத்தானைத் தோன்றலைத் தம்மின்ஞ்" (சீவகசிந்தாமணி, பா. 2899) எனச் சீவகசிந்தாமணியும் தெரிவிக்கின்றனர். போர் முரசை வைப்பதற்காக தனியாக கட்டில் முரசுக்கட்டில் அமைக்கப்பட்டது. தெய்வத்தன்மை உள்ளதாகவும், வெற்றியைத் தருவதாகவும் மதிக்கப்பட்டமையால் முரசுக்கு மாலையும், பீலியும் அணிந்து நீராட்டி, பலியிட்டு வழிபடுதல் தமிழ்மறவர்களின் மரபாக இருந்துள்ளது.

## ஒற்றர்கள்

வேந்தனின் உண்மை விசுவாசிகளாகச் செயல்பட்டவர்கள் ஒற்றர்களாவர். பிறவேந்தர் தலைநகரில் ஏதும் அறியா பொதுமக்களுள் ஒருவராய் இரவும், பகலும் கவனித்து, அங்கு நடப்பவற்றை உடனுக்குடன் தம் வேந்தனுக்குத் தெரிவிப்பவர்கள் ஒற்றர்களாவர். நாட்டின் அரசியல் சூழ்நிலை மற்றும் போர் சூழ்நிலையை அனுமானித்து அறிந்து கொள்வதில் ஓர் பங்கு அளவிடற்கரியதாக அமைந்தது. ஆதலால் ஒற்றமறவர்களின் பணியினை 'நாட்டுக்காப்பு' என்றழைத்தல் பொருத்தமானதாகும்.

## படைக்கலக் கொட்டில்

போரற்ற அமைதிக் காலங்களில் ஆயுதங்களுக்கு நெய்பூசி, பீலியணிந்து மாலை சூட்டி வைப்பது வழக்கம். இவ்வாறு போர்க்கருவிகளை வைத்து பாதுகாத்த இடம் 'படைக்கலக் கொட்டில்' எனப்பட்டது.

## போர்முடிவுகள்

போரின் இறுதிக்கட்டத்தில், தோற்கும் நிலையில் இருக்கும் வேந்தன் பகையரசனிடம் உடன்படிக்கை செய்ததற்காக மறவனை தூது அனுப்புதல் மரபாகும். இத்தூதானது பாசறை அல்லது போர்க்களத்தில் இருந்து விடுக்கப்படும். மாற்றரசன் கோரிக்கை ஏற்கப்படுதலும், மறுக்கப்படுதலும் உண்டு. இருவேந்தர்களுக்குமிடையே உடன்படிக்கை ஏற்படின், மணவுறவு பூணுதல், சிற்றரசனாக்குதல், திறைசெலுத்த வைத்தல் போன்றவை நிகழ்ந்துள்ளன. மறுப்புதெரிவிக்கும் நிலையில், தூது மறவனைசிறையிடலும் உண்டு. பகைவேந்தனைக் காட்டிற்குத் துரத்துதல், மானக்கேடு செய்தல், சிறையிடல், கொல்லுதல் போன்றவை நிகழ்ந்துள்ளன. வேந்தனின் தேவிமார், மற்ற பெண்கள் சிறைபிடிக்கப்பட்டு வென்ற வேந்தனின் தலைநகரிலுள்ள 'வேளம்'என்னுமிடத்தில் வைக்கப்பட்டனர்.

தோல்வியுற்ற நாட்டைக் கொள்ளையடித்தல், எரியூட்டுதல், விளைநிலங்களை அழித்தல், கோட்டைகள், மதில்களை அழித்தல், காவல் மரத்தை வெட்டுதல், நன்னீர் குளங்களைப்

பாழ்படுத்துதல், நாடு, ஊர்களின் பெயர்களை மாற்றி வென்றோர் குடிப்பெயர் சூட்டுதல் முதலானவை நிகழ்ந்துள்ளன. இடத்தில் வெற்றிவிழா நடத்தி வெற்றிக்கல் நிலைநிறுத்துதல், இலச்சினையைப் பொறித்தல் போன்ற செயல்கள் வென்ற அரசனால் மேற்கொள்ளப்படுதல் உண்டு. வெற்றியின் நினைவாகவும், போரில் நிகழ்ந்த குற்றங்களுக்குக் கழுவாகவும் கோயில்கள் கட்டுதல், கொடைவழங்குதலும் நடந்தன. போரில் இறந்துபட்ட மறவர்களின் நினைவாக அவர்களின் பெயரும், ஊரும் பொறிக்கப்பட்ட நடுகல் நடப்பட்டு நீரிட்டு, மாலைசூட்டி கோயில் எடுத்து விழா கொண்டாடப்பட்டது.

## மறவேந்தனின் முடிவுநிலை

தமிழக வேந்தர்களும், மறவர்களும் போரில் இறத்தல் என்னும் நிலையை அடைந்ததற்கு அரிய பேறாகவும், விண்ணுலகம் புகும் வழியாகவும் கருதினர். போர் இன்றி வாழும் வாழ்க்கையை வீண் என்று கருதினர். வயது மூப்பின் காரணமாகவும், நோய் போன்ற காரணங்களாலும் இறந்த மன்னர்களும், மறவர்களும் வாளால் போழ்ந்து அடக்கம் பெற்றனர். இத்தகைய நிலையானது, இலக்கியங்களில் 'வால்போழ்ந்தடக்கல்' என்றழைக்கப்பட்டது. இக்கருத்தினை, "வாள்போழ்ந் தடக்கலும் உயர்ந்தனர் மாதோஞ்" (புறநானூறு, பா. 93) என்னும் புறநானூற்றுப் பாடலால் அறியலாம்.

## நடுகல் மரபு

பெரிய கற்களாலான அமைப்புகளை மக்கள் உருவாக்கிய காலப்பகுதி வரலாற்றில் 'பெருங்கற்காலம்' என்று குறிக்கப்படுகிறது. இத்தகைய கல் அமைப்புகள் பெரும்பாலும் இறந்தவர்களுடைய புதைக்குழிகளின் மீது அமைக்கப்பட்டிருப்பதாகவும், உலகம் முழுவதும் பல்வேறு இனங்களைச் சார்ந்த மக்களால் பல்வேறு காலகட்டங்களில் இவை நினைவுச் சின்னங்களாகக் கட்டப்பட்டிருப்பதாகவும் வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர். இக்காலத்தைச் சேர்ந்த பெருங்கல் அமைப்புகள் கற்பதுக்கை, கற்குடை, கற்குவை, பரல், உயர் பதுக்கை, தொப்பிக்கல், குடைக்கல், நெடுநிலை நடுகல் எனப் பல வகைகளாக உள்ளன. தமிழகத்தில் நடுகல்மரபு தொல்காப்பியத்தில் காணப்படுகிறது. "காட்சி கால்கோல் நீர்ப்படை நடுகல்ஞ்" (தொல், புறத்திணையியல், நூற்பா. 63) என்று தொல்காப்பியனார் கூறியுள்ளார். இந்த நடுகற்கள், தொடக்க காலங்களில் போரில் வீரமரணம் அடைந்த வீரர்களின் நினைவாக அமைக்கப்பட்ட பின்னாளில் வழிபாட்டு தெய்வங்களாக மாற்றம் பெற்றன. நடுகற்களில் அதற்குரிய வீரரின் பெயரும், பெருமைகளும் பொறிக்கப்பட்டன. இதனை. "பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்ஞ்" (அகநானூறு, பா. 67) என்பதால் அறியலாம்.

*"என்னைமுன் நில்லன்மிர் தெவ்விர் பலரென்னை*
*முன்னின்று கல் நின்றவர்"*

(திருக்குறள், படைச்செருக்கு, குறள் 771)

என்னும் திருக்குறளும் நடுகல் மரபிற்குச் சான்றாக அமைந்துள்ளது. போர்க்களத்தில் இறந்த வீரனின் பெயரும், பெருமையும் நடுகல்லில் எழுதும் வழக்காறு பற்றி புறநானூறு, அகநானூறு, மலைபடுகடாம், பட்டினப்பாலை, புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்கள் காட்டுகின்றன. போரில் வீரமரணம் அடைந்தவர்களுக்கும், மானம் காக்க வடக்கிலிருந்து உயிர்துறந்த வேந்தருக்கும், பத்தினிப் பெண்டிருக்கும் நடுகல் அமைக்கும் மரபு இருந்துள்ளது. நடுகல்லை வழிபட்டு வேண்டியதைப் பெறலாம் என்ற நம்பிக்கையின் காரணமாக நடுக்கற்கள் வழிபாட்டுக்குரியனவாகப் பிற்காலத்தில் மாற்றம் பெற்றன. நடுகல்லை தெய்வமாகக் கருதி நாட்காலையில் நீராட்டி, கள் முதலியனபடைத்து, பலியூட்டி, தூபம் காட்டி, வணங்கிய முறைமை, புறநானூற்றில் (264) சொல்லப்பட்டுள்ளது. இதன்வழி, நடுகல் வழிபாட்டின் நீட்சியாகவே சமூகத்தில் சிறுதெய்வ வழிபாட்டு மரபு தோன்றியதெனக் கருதலாம்.

## வடக்கிருத்தல்

ஊருக்குப் புறம்பான பறந்தலையில் வடக்கு நோக்கி அமர்ந்து உண்ணா நோன்பிருந்து உயிர் துறக்கும் மரபானது

சங்க வேந்தர்களாலும், மறவர்களாலும், சான்றோர்களாலும் கடைபிடிக்கப்பட்டது. போரில் பெற்ற புறப்புண் கண்டு நாணி வடக்கிருத்தல், உலகப்பற்றை துறந்து வடக்கிருத்தல், தாம் ஈன்ற புதல்வர்களோடு மாறுபட்டு வடக்கிருத்தல், பகைவரிடம் சிறைபட்டு உண்ணாது வடக்கிருத்தல் என உளம் சார்ந்த பல காரணங்களுக்காக வடக்கிருத்தல்.

### பள்ளிப்படை

அரசன் மற்றும் வீரப்போர் புரிந்த மறவர்கள் இறந்தபின் அவர்களது உடம்பைத் தாழியில் புதைத்தல் மரபாக இருந்தது. அவர்களுக்கான இறுதிச் சடங்கினை மேற்கொள்ளுதல் 'பள்ளிபடுத்தல்' அல்லது 'பள்ளிப்படை' என்றழைக்கப்பட்டது. மேலும், இறந்தவர்களின் நினைவுக் குறியாக எழுப்பப்பட்ட கட்டிடம் 'பள்ளிப்படைக் கோயில்' எனப்பட்டது.

### முடிவுரை

இனக்குழுக்களாக இருந்த தமிழ்ச்சமுதாயம் வளர்ச்சியடைந்து மன்னர் காலத்தை அடைந்ததும், ஆவினங்கள் செல்வமாக கருதப்பட்ட நிலைமாறி நிலவுடைமைச் சமுதாயம் மலர்ந்து, நிலப்பரப்பு போர்கள் தொடங்கியது, மன்னர்களின் எல்லைகளை விரிவுபடுத்தும் பேராசை தமிழகத்தில் மீண்டும், மீண்டும் போர்கள் நிகழ்வதற்குக் காரணமாயிருந்தமையும், மன்னர்கள் வீரம், புகழ், விழுப்புண்கள் போன்ற கருத்தாக்கங்களுக்கு ஆட்பட்டு தாங்களும் போரிட்டு மாய்பவர்களாகவும், பல்லாயிரம் வீரர்களைப் பயன்படுத்துபவர்களாகவும் இருந்து வருகின்றனர். மேலும், வேந்தர்கள் குறுநில மன்னர்கள் மீது தொடுத்த போர்கள், மூவேந்தர்களும் தங்களுக்குள் முரண்பட்டு மேற்கொண்ட போர்கள் எனப் பல்வேறு உள்நாட்டுப் போர்கள் நடைபெற்றாலும், கடற்படை கொண்டு, தரைப்படை கொண்டும், வட நாட்டிலும் இலங்கை முதலான பிற நாடுகளின் மீது மன்னர்கள் நிகழ்த்திய போர்கள், போர்களின் உச்சகட்ட வளர்ச்சி எனக் கருதலாம். மேலும், இக்கட்டுரையின் வழி, தமிழகப் போர்முறையில், போருக்கான காரணங்கள், போர் தொடங்கும் முன்னான மரபுகள், போரின் போது பின்பற்றிய மரபுகள், போரில் வெற்றிக்குப் பின்னால் மேற்கொண்ட மரபுகள் முதலான தகவல்கள் ஆராயப்பட்டன. மேலும், படைச்சிறப்பு, போர்கருவிகளின் பயன்பாட்டுமுறை, படைப்பிரிவுகள், போர்வியூகம், போர்முடிவு, நடுகல்மரபு, பள்ளிப்படை அமைத்தல், தமிழகத்தில் நடைபெற்ற பெரும் போர்கள், போர்களின் வளர்ச்சி நிலை உள்ளிட்ட தகவல்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

## References

Asiriyar Kulu. (2004). *Nattrinai Urai*. Chennai: Thirumagal Nilaiyam.

Booma Ponnavaiko. (2012). *Kambaramayanam*. Chennai: New Chenchuri Book.

Kamala Murugan. (2008). *Porunarattru Padai*. Chennai: Saratha Pathipagam.

Kathirmurugu. (2013). *Mathurai Kanchi*. Chennai: Saratha Pathipagam.

Maraimalaiyadigal. (2006). *Mullai Pattu*. Chennai: Ramaiya Pathipagam.

Puliyurkesigan. (2010). *Paripadal*. Chennai: Sri Sanbaga Pathipagam.

Puliyurkesigan. (2010). *Pathittru Patthu*. Chennai: Sri Sanbaga Pathipagam.

Puliyurkesigan. (2010). *Purananooru*. Chennai: Saratha Pathipagam.

Puliyurkesigan. (2012). *Aagananooru*. Chennai: Saratha Pathipagam.

Puliyurkesigan. (2012). *Tholkappiyam Urai*. Chennai: Pari Nilayam.

Saminatha Iyyer. (1950). *Sevaga Sinthamani*. Chennai: Kabir Atchu Koodam.

Thirukooda Sundaram. (1967). *Silapathikaram*. Chennai: Annamalai Veliyedu.

Varatharajan, M. (1963). *Thirukural*. Chennai: Manivasagar Pathipagam.